மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 11 புதன்கிழமை (23 - 02 - 2000) VALAMPURI ஒலி: 66

★ செம்மணிப் புதைகுழி விவகாரம்

# அதிகாரிகள் உட்பட 7 படையினரை

# கைதுசெய்யுமாறு நீதவான் உத்தரவு

## அடுத்தமாதம் ஆஜர் செய்ய வேண்டும்

= வலம்புரி அலுவலகச் செய்தியாளர் —

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் செம்மணிப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எச்சங்கள் தொடர்பாக நான்கு அதிகாரிகள்உட்பட 7படையினரைக் கைது செய்து அடுத்த மாதம் 14 ஆம் திகதி நீதி மன்றத்தில் ஆஜர் செய்யுமாறு நீதிவான் எம்.இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

செம்மணி புதைகுழிகளில் மீட்கப்பட்ட எலும்புக்கூடு களுடன் மீட்கப்பட்ட தடயப் பொருட்களை அடையாளம் காணும் பொருட்டு யாழ். மத்திய கல்லூரியில் வைக்கப்பட்டபோது அங்கு கூடிய யாழ். அமர்வு நீதிமன்றமே இவ்வுத்தரவைப் பிறப்பித்தது.

மேற்படி செம்மணி சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்களான இராணுவத்தைச் சேர்ந்த கப்டன் பெரேரா, கப்டன் லலித்ஹேவகே, லெப்ரினன்ட் துடுகல்ல, லெப்ரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மரபணுப் பரிசோதனைக்கு சுமதியின் உறவினர்களுக்கு அழைப்பு

யாழ். மத்தியகல்லூரியில் பார்வைக்கு வைக்கப்பட்ட தடயப்பொருட்கள் மூலம் குமாரவேலுகுமாரகுலசிங்கம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்ட சுமதி என்பவரின் பெற்றோர் உறவினர்கள் மரபணுப் பரிசோதனை மேற்கொள்வதற்காக இன்று யாழ்.மத்தியகல்லூரிக்கு வருமாறு குற்றப்புலனாய்வுப் பொலிஸார் கேட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுக் காணாமல் போனோரின் பெற்றோர், உறவினர்களில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி இராணுவ தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற முக்கிய மாநாடு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அப்பகுதி கடற்றொழிலாளர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் குறித்து 524 ஆவது இராணுவ தலைமையகத்தில் நேற்றுப்பகல் விரிவாக ஆராயப்பட்டது.

524 ஆவது பிரிவு கட்டளை அதிகாரி கேணல் சமரவீர என்பவரின் தலைமையில் இடம் பெற்ற மேற்படி மாநாட்டில் பருத்தித்துறை வடமராட்சி கிழக்கு, மரு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.- திருமலை பயணிகள் கப்பல் சேவை அடுத்த மாத நடுப்பகுதியில் ஆரம்பம்?

(கொழும்பு)

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்குமிடையே அதி வேக கப்பல் சேவை அடுத்த மாதம் இரண்டாம் வாரத்தில் ஆரம்பமாக உள்ளதாக இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபன பொது முகாமையாளர் சரத்குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

ஒரு பயணத்தில் 300 பயணிகளை ஏற்றக்கூடிய இக் கப்பல் சேவை தொடர்பான ரிக்கற் வழங்கல் உட்பட சகல பொறுப்புக்களும் திருமலை பிரதேச செயலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியிலிருந்து பயணிகள் வருகை

(வவுனியா)

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னியிலிருந்து வவுனியாவிற்கு நேற்று 338 பயணிகள் பிரமனாளங்குளம் ஊடாக வந்து சேர்ந்துள்ளனர்.

வவுனியாவிலிருந்தும் 340 பயணிகள் நேற்று புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு சென்றனர்.

இதேவேளை கடந்த சனிக்கிழமை பயணிகள் வன்னி செல்ல இருந்தும் நேற்றே இவர்கள் வன்னி சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-103)

## செஞ்சிலுவைப் பிரதிநிதி விஜயம்

(வடமராட்சி)

தென்மராட்சி சாவகச்சேரிப்பகுதிக்கு நேற்று செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி கின்நேற் விஜயம் ஒன்றை மேற்கொண்டார் இவர் சாவகச்சேரிப் பகுதி நிலமைகளையும், சாவகச்சேரி ஈ. பி, டி, பி. அலுவலகம் உட்பட இங்குள்ள பொது நிறுவனங்களிற்கும் நேரில்சென்று நிலைமைகளை ஆராய்ந்துள்ளார். (க -43)

## இரண்டாவது நாளாக நேற்றும் தடயப்பொருள் பார்வைக்கு வைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

செம்மணிப் புதைகுழித் தடயப்பொருட்கள் காணாமல் போனோரின் உறவினர்களால் அடையாளம் காணும் பொருட்டு நேற்று இரண்டாவது நாளாக யாழ். மத்திய கல்லூரியில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

நேற்று இத்தடயப்பொருட்களை இனங்காண்பதற்காக மிகக் குறைந்த எண்ணிக்கையான உறவினர்களே சமூகமளித்திருந்தனர் சுமார் 22 பேர் மாத்திரமே நேற்று வருகை தந்திருந்தனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி காங்கேசன்துறை தடுப்பு முகாமுக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரியும் சட்டத்தரணியுமான என்ஜீவேஸ்வரா இன்று பார்வையிடுவதற்கு அங்கு செல்லவுள்ளார்.

கைதிகளின் உறவினர்களால் வழங்கப்பட்ட உணவு உடை, மற்றும் கடிதங்களையும் கைதிகளிடம் ஒப்படைக்கவுள்ளார்.

காங்கேசன்துறை தடுப்பு

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஈ. பி. ஆர். எல். எவ். விவகாரம்:

## சுரேஷ்பிரேமச்சந்திரன் உட்பட மத்தியகுழு உறுப்பினருக்கு தடை உத்தரவு

(கொழும்பு)

சுரேஷ் பிரேமச்சந்திரன் உட்பட 13 மத்திய குழு உறுப்பினர்கள் ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் மத்திய குழு உறுப்பினர்கள் எனச் செயற்படுவதற்கு இடைக்காலத் தடைஉத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றவட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு மாவட்ட நீதி மன்றத்தில்நீதிபதிஎக்கரட்ண ஈ.பி.ஆர்.எல்.எவ். அங்கத்தவர்களான தம்பிராஜா, சுபத்திரன், (றொபேட்) இராசையா துரைரத்தினம், (இரட்ணம்) திருநாவுக்கரசு,

(6 ஆம் பக்கம் பார்க்க)

பாடசாலையில் இருந்த பொலிஸ்

## காவல் நிலையம் மீது புலிகள் தாக்குதல் ஒரு பொலிஸார் பலி! மாணவன் காயம்!!

(திருமலை)

திருமலை மூதூர்ப் பிரதேச முஸ்லிம் மத்திய கல்லூரியில் அமைந்திருந்த பொலிஸ் காவலரண் மீது விடுதலைப்புலிகளால் நடத்தப்பட்டதாக்குதலில் ஒரு பொலிஸார் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 7.55மணியளவில் நடந்த இத்தாக்குதலில் சிவஞானவேல் [வயது 30] என்ற பொலிஸாரே கொல்லப்பட்டவராவார்இவரது சடலம் மூதூர் வைத்திய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சரணடைந்த 164 இராணுவத்துக்கு மன்னிப்பு - ஆயுதங்களுடன் சேவையில்!

(கொழும்பு)

அண்மைக்காலங்களில் இராணுவத்தில்இருந்து தப்பி ஓடியவர்களில் 164 பேர் நேற்று முன்தினம்சரணடைந்துள்ளனர். இவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்கள் சரணடையலாம் என்றஅரசின் வேண்டுகோளை அடுத்தே நேற்று முன் தினம்இவர்கள் சரண

(6 ஆம் பக்கம் பார்க்க)

# உண்ணா விரதிகளின் உறவினர்

# நேற்று புதுக்குடியிருப்பு சென்றனர்

(வவுனியா)

கடந்த 10 ஆம் திகதி முதல் புதுக்குடியிருப்பில் உண்ணா விரதமிருக்கும் படையினரின் உறவினர்கள நேற்று இரவு புதுக்குடியிருப்பை அடைந்துள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைப் பேச்சாளர் ஹர்ஷா குணவர்த்தனா தெரிவித்தார்.

நேற்றுக்காலை அனுராதபுரத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்த உண்ணாவிரதிகளின் உறவின்ர்களைக் கொண்ட குழுவினர் வவுனியா வந்து வவுனியா மன்னார் வீதியில் பிரமனாளங்குளம்

[6 ஆம் பக்கம் பார்க்க]

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# விளையாட்டுச் செய்தி

## பருத்தித்துறையில் 21 ஆம் திகதி முதல் உதைபந்தாட்டப் போட்டிகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலகம் நடாத்தும் கழகங்களுக்கிடையிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள் நேற்று முன்தினம் தொடக்கம் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றன.

இவ் உதைபந்தாட்ட போட்டிகளில், தொண்டமனாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகம் கலைவாணி விளையாட்டுக்கழகம், திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம், அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம், கழுகு விளையாட்டுக்கழகம், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம், உதயதாரகை விளையாட்டுக் கழகம், வல்வை விளையாட்டுக்கழகம் அண்ணா விளையாட்டுக்கழகம், நக்கீரன் விளையாட்டுக் கழகம், சிவானந்தா விளையாட்டுக்கழகம், பாரதி விளையாட்டுக்கழகம்போன்ற கழகங்கள் இப்போட்டிகளில் பங்கு பற்றியுள்ளன. (க-11)

### துடுப்பாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளுக்கிடையிலான 19வயதுக்குட்பட்டோருக்கான துடுப்பாட்ட போட்டிகளில்யாழ்/ கொக்குவில் இந்துக்கல்லூரி 25ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2.30-5 30 வரை சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கு எதிராக ஆடவுள்ளது.

26ஆம்திகதி சனிக்கிழமையும் மு.ப.9.00-5.30வரை மேற்படி இரு கல்லூரிகளும் ஆடவுள்ளது.

இத் துடுப்பாட்டங்கள் யாவும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்திலேயே இடம்பெறவுள்ளது.

(செ-01)

### கரப்பந்தாட்டப் போட்டி

(கரணவாய்)

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வரும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் இன்று புதன்கிழமை 17 வயதுப் பிரிவினருக்கான போட்டிகள் இடம்பெறவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குபற்றும் பாடசாலைகள் யா/ இடைக்காடு மகாவித்தியாலயம் எதிர் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம்.

யா/ இடைக்காடுமகாவித்தியாலயம் எதிர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

யா/ ஆவரங்கால் மகாஜனாவித்தியாலயம் எதிர் அத்தியார் இந்துக் கல்லூரி.

(செ-27)

### இல்ல மெய்வன்மை போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். சென். ஜேம்ஸ் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பி. ப. 2.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (செ)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யா/மிருசுவில் றோமன்கத்தோலிக்க வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்றுபுதன்கிழமை பி.ப1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இவ்விளையாட்டுப்போட்டிக்கு,கொடிகாமம் பளைக் கல்விக்கோட்டம் கோட்டக் கல்விப்பணிப்பாளர் அ.கயிலாயபிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார்

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யா / நுணாவில் மேற்கு அ. த. க. பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன் கிழமை நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி த. குலசேகரம் தலைமையில் நடைபெறும் இவ் விளையாட்டுப் போட்டிக்கு ஓய்வு பெற்ற உப அதிபர் செ. கதிர்சாமநாதன் முதன்மை விருந்தினராக கலந்து கொள்கிறார். (செ)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யா/ வேலணை சைவப் பிரகாச வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை மு.ப. 9.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் பொ. அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறும். மெய்வல்லுநர் போட்டிக்குத் தீவக வலயக் கல்வி பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கின்றார். (செ-01)

### நாளை கரப்பந்தாட்டம்

(இளவாலை)

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டமட்டத்திலான கரப்பந்தாட்ட இறுதியாட்டம் நாளை வியாழக்கிழமை இளவாலைபுனித கென்றியசர்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இவ்வாட்டத்தில் 19வயதுக்குட்பட்டபிரிவில் புனி.கென்றியரசர்கல்லூரியை எதிர்த்து மானி.இந்துக்கல்லூரி மோதவுள்ளது 17வயதுக்குட்பட்ட பிரிவில்மானி.இந்துக்கல்லூரியைஎதிர்த்து மானி.மெமோறியல் மோதவுள்ளது.

(க-12)

### சென். பற்றிக்ஸ் இனிங்ஸால் வெற்றி

(ஈச்சமோட்டை)

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும், மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்கும் இடையில்; சென்.பற்றிக்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியில், சென்.பற்றிக்ஸ் கல்லூரி 'இனிங்ஸ், ஆல் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் அணி 9 இலக்குகளை இழந்து, 158 ஓட்டங்களைப் பெற்றது.

2 ஆம் சுற்றில் ஆடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 50 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. (செ-59)

### நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். கொட்டடி நமசிவாய பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

தலைவர்: கல்லூரி அதிபர் திருமதி செ.பத்மநாதன், செயலர் வி. குகானந்தன், பொருளாளர் மு.இராசநாயகம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க-வ)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யாழ். கொட்டடி பழைய மாணவர் சங்க நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

தலைவர்:திருமதி செ. பத்மநாதன்,செயலாளர் ந. சிவகுமரன், பெருளாளர் செல்வன் சி.சிறீதரன். (க-வ)

### வணிகர் கழகப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாண வணிகர் கழக வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டம் இன்று புதன் கிழமை பி.ப.2 மணிக்கு (புதிய நேரம்) மேற்படி கழகப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

சகல வர்த்தக ஸ்தாபன உரிமையாளர்களதும் வரவுகள் பதியப்பட்டு அவை சமர்ப்பிக்க வேண்டியிருப்பதால் சகல வர்த்தக ஸ்தாபன உரிமையாளர்களும், இன்று தமது வர்த்தக ஸ்தாபனங்களை 12 மணியுடன் பூட்டி ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

(செ-1)

### இன்று வெளியீட்டு விழா

(அச்சுவேலி)

புகழ் பூத்த நீர்வேலி நூல் வெளியீட்டுவிழா நீர்வேலி காமாட்சி அம்பாள் ஆலய முன்றலில் இன்று 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் வேல்நம்பி தலைமையில் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெறும் இவ் வெளியீட்டு விழாவில் பிரமுகர்கள் பலர் கலந்து கொள்வர்.

(க-57)

### கிளைமோர் செயலிழப்பு

(பொலிகண்டி)

வல்வெட்டிப்பகுதியில் கடந்த சனிக்கிழமை வீதிக்கு அருகாமையில் வீடு ஒன்றின் மதில்மீது மறைத்து வைக்கப்பட்ட கிளைமோர் கண்டுபிடிக்கப்பட்டு படையினரால் செயலிழக்கச் செய்யப்பட்டது. (க)

### கண்டெடுக்கப்பட்டது

புகையிரத பாதை வீதி, இல. 82/1 அரியாலை என்னும் முகவரியைச் சேர்ந்த பாலசிங்கம் விக்கினேஸ்வரன் என்பவருடைய விசேட அடையாள அட்டை, கண்டெடுக்கப்பட்டு வலம்புரி பத்திரிகை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.

### (இராசி பலன்)

23.02.2000
புதன்கிழமை

(தமிழுக்கு மாசி –11)

சதுர்த்தி இரவு 8.26 வரை, அத்தம் காலை 10.55 வரை, சித்தம் இராகுகாலம் பகல் 1.01 முதல் 2.09 வரை. சுபநேரம் மாலை 5.30 முதல் 7.00 மணி வரை.

**மேடம்:**
தனலாபம், அயல்நாட்டுத் தகவல், மனமகிழ்ச்சி.

**இடபம்:**
வேலைப்பழு, கடன்சுமை, குடும்பக்கவலை.

**மிதுனம்:**
புத்திரர் வழிச்செலவு. தொழில், குழப்பம், ஆவேசம்.

**கடகம்:**
பொருள் வரவு, தானதர்மம், ஞானிகள் அறிவுரை.

**சிங்கம்:**
கருத்துவேறுபாடு, அயலவர்துயர், பணத்தட்டுப்பாடு,

**கன்னி:**
சகோதரர் உதவி, தொழில் லாபம் கணவர் சிறப்பு.

**துலாம்:**
அதிகாரிகள் எச்சரிக்கை, தொழில் முடக்கம், வேதனை

**விருச்சிகம்:**
பணியாளர் உதவி, நோய் அகலல், பயணம்.

**தனுசு:**
தொழில் மாற்றம், கடின உழைப்பு, விவேகம்.

**மகரம்:**
மரியாதைக்குறைவு, எதிரிகள் துயர்,மனப்போராட்டம்

**கும்பம்:**
குடும்பபிரிவு, நோய் உபாதைகள், அகால உணவு.

**மீனம்:**
பழைய நட்பு, குடும்ப மகிழ்ச்சி, தெய்வதரிசனம்.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா

## விமானப் பயண அனுமதி வழங்கப்பட்டோர்

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு இம்மாதம் 22-ம் திகதிவரைவிமானப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாகத் தரப்படுகின்றது.

சங்கானை

| | |
|---|---|
| 129324 ஏ | 130759 ஏ |
| 130759 பி | 130802 ஏ |
| 130802 பி | 131841 ஏ |
| 135597 ஏ | 135619 ஏ |
| 135619 பி | 135619 சி |
| 135620 ஏ | 135620 பி |

நல்லூர்

| | |
|---|---|
| 131848 ஏ | 131848 பி |
| 131848 சி | 131848 டி |
| 131848 ஈ | 135577 ஏ |
| 135577 பி | 135654 ஏ |
| 135693 ஏ | 135806 ஏ |
| 135806 பி | |

சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 128998 ஏ | 128998 பி |
| 128998 சி | 129086 ஏ |
| 129239 ஏ | 130584 ஏ |
| 130584 பி | 131729 ஏ |
| 131804 ஏ | 134455 ஏ |
| 134456 ஏ | 135665 ஏ |
| 135665 பி | 135665 சி |

தெல்லிப்பழை

| | |
|---|---|
| 129042 ஏ | 130773 ஏ |

உடுவில்

| | |
|---|---|
| 131802 ஏ | 131874 ஏ |
| 135640 ஏ | 135640 பி |
| 135803 ஏ | |

உ

பூப் புனித மங்கள நீராட்டுவிழா

அன்புடையீர்:

நிகழும் மங்கள கரமான பிரமாதி வருஷம் மாசி திங்கள் 12 ஆம் நாள் (24 — 2 — 2000) வியாழக்கிழமை காலை 7.30— 8.30 மணியளவில் வரும் சித்திரை நட்சத்திரமும் பஞ்சமித்திதியும் சித்தமிர்தம் கூடிய கும்பலக்கின சுபவேளையில்

எமது கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
கௌசல்யா அவர்களுக்கு

பூப்புனித நீராட்டி ருதுசாந்தி செய்ய திருவருள் துணை கொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அவ்வமயம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து வைபத்தை சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

மகிழ்ச்சி

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
திரு. திருமதி ச. இந்திரகுமார்
குடும்பத்தினர்
(உமா ஸ்ரோர்ஸ்
வண்ணை சிவன்கோவிலடி)
யாழ்ப்பாணம்.

187/8 கில்னர் லேன்
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:- தனிப்பட்ட அழைப்புகள் இல்லை பெருமிதமாய் அன்புடன் ஏற்றுக் கொள்ளவும்.

(கி-175)

### யாழ்ப்பாண பிரதேச செயலகக் கட்டடம் அமைப்பதற்கான காணி அன்பளிப்பு

யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் இதுவரை காலமும் அதன் முழு அலுவல்களையும் பொது மக்களுக்கு வசதியாக ஒரே கட்டடத்தின் கீழ்ஆற்ற முடியாமல் வெவ்வேறு இடங்களில் இயங்கி வருவது அனைவரும் அறிந்ததே. இதனால் பொது மக்களாகிய நீங்கள் பல அசௌகரிகங்களுக்கும் உட்பட்டு வருகின்றீகள்.

ஆகவே எதிர்காலத்தில் பொது மக்களுக்கு வசதியான புதிய கட்டடமொன்றினை அமைத்துக் கொள்வதற்கு பொதுப் போக்குவரத்து சூழல் நிறைந்த பகுதியில் காணியினை அன்பளிப்பு செய்து உதவுமாறு பொது நலன் விரும்பிகளையும், பொது மக்களையும் சமய ஸ்தாபனங்கள், பொது ஸ்தாபனங்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

P. செந்தில்நந்தனன்
பிரதேச செயலாளர்,
யாழ்ப்பாணம்,

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

இலங்கையின் நிறைவேற்று

# ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டு பா.மன்ற முறை அமுலாக வேண்டும்

## அமைச்சர் பட்டி வீரக்கோன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில்தற்போதுள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்துக்கட்டி பாராளுமன்றத்தின் அதிகாரங்களை துரிதமாகப் பலப்படுத்த வேண்டும் என அமைச்சர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டம் மீதான நேற்றைய விவாதத்தின் போது பட்டி வீரக்கோன் மேலும் தெரிவித்ததாவது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்துக்கட்டுவதற்கு பதில் அதில் திருத்தம் மேற்கொள்வதில் எந்த விதமான அர்த்தமும் கிடையாது.

இதுவரை காலமும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகள் தமது பதவியின் அதிகாரத்தை பயன்படுத்திய விதம் பற்றியும், தற்போதைய ஜனாதிபதி, அதிகாரத்தை பயன்படுத்தும் விதம் பற்றியும் ஆராயுமிடத்து பாரிய வித்தியாசங்கள் இருக்கின்றன.

அமைச்சரவைக் கூட்டங்களில் அவர்கள் கூறும் கருத்துக்களுக்கு எப்போதுமே இன்றைய ஜனாதிபதி ஆட்சியில் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. எனவும் தனது கருத்தைத் தெரிவித்தார். (க-9)

## கொள்ளுப்பிட்டியில் 19 லட்சம் கொள்ளை

கொள்ளுப்பிட்டியிலுள்ள தனியார் உணவகம் ஒன்றில் அண்மையில் ஆயுதம் தாங்கிய ஆறு பேர் கொண்ட கோஷ்டி ஒன்று 19 லட்சம் ரூபாவைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

கொள்ளுப்பிட்டியில் உள்ள மக்டொனர்ஸ் என்ற உணவகத்திலேயே இக் கொள்ளைச்சம்பவம் இடம் பெற்ள்ளது. (வ)

## 'சனச' நலன்புரி நிலையத்தின் சுகாதார சீர்கேடு குறித்து முறைப்பாடு

(வவுனியா)

இராணுவக் கட்டுப்பாடில்லாத வன்னியிலிருந்து வரும் அகதிகள் தங்கியுள்ள சனசதற்காலிக நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப் பட்டுள்ளவர்களுக்கு சொறி சிரங்கு, வயிற்றோட்டம் என்பன ஏற்பட்டுள்ளதாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக 56பேர் கையொப்பமிட்ட மகஜர் ஒன்று வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு இணைப்பதிகாரி எஸ். சிறிதரனிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரக் கேடு மலசல கூட பற்றாக்குறைவு, துர்நாற்றம் போன்ற குறைபாடுகள் உள்ளதாக அந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

30 குடும்பங்களைச்சேர்ந்த மக்கள் இம்முகாமில் இடவசதி போதாமையால் மர நிழலிலேயே இரவு பகலாக இருப்பதாகவும் அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (103)

## யாழ்ப்பாணத்தில் பாடநூல் விநியோகம் சீரின்மை குறித்து கல்வியாளர் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து இலவச பாடநூல்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டும் கூட அவை சீரான முறையில் விநியோகம் செய்யப்படாது கல்வித்திணைக்கள அலுவலகங்களிலும், பாடசாலைகளிலும் தேங்குவதாக கல்வியாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

யுத்த அனர்த்தங்களால், இடப் பெயர்வால் நலிவுறும் மாணவர்கள் கல்வியைத் தொடர பாடநூல்கள் இல்லாமலும் துன்பப்படுகிறார்கள்.

இரண்டு மாதங்கள் முடியும் தறுவாயிலும் பாடநூல்கள் யாழ்ப்பாணத்தில் தூங்குகின்றன. அதனால் மாணவர்கள் ஏங்குகின்றனர்.

பணமிருந்தும் வாங்க முடியாதவை பாடநூல்கள்- அன்றியும் அதிகாரிகளின் பிள்ளைகளல்லாதவரும்- தொடர்போ- சொந்தமோ கொண்டாட முடியாதவரும் வெறுங்கையோடுதான் இருக்கின்றார்கள.

இதுவிடயத்தில் கல்வி அதிகாரிகள் உரிய கவனம் எடுக்க வேண்டுமெனவும் பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (க)

## வாழைச்சேனை

## பிரதேசசபை காரியாலயத்தில் கணனி, முத்திரையிடும் இயந்திரம் திருட்டு

(ஜெஸ்மின்)

வாழைச்சேனை பிரதேச சபைக் காரியாலயத்தில் இருந்த இரண்டு கணனிகள் மற்றும் தபால் முத்திரையிடும் இயந்திரம் ஒன்றும் களவாடப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த கணனிகள் வாழைச்சேனை மற்றும் வாகரை ஆகிய பிரதேச சபைகளிற்கு சொந்தமானவை. கொள்ளையிடப்பட்ட பொருட்களின் பெறுமதி சுமார் $3\frac{1}{2}$ லட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

வாழைச்சேனை பிரதேச சபையின் கதவுகள் உடைக்கப்பட்டு பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன பிரதேசசபைகளின் காவலாளிகள் இருவர் கைது செய்யப்பட்டு பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (க)

## மட்டக்களப்பில்

## இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு விரைவில் மின்சாரம் வழங்க நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வவுணதீவு மங்கி, சிட்டு ஆகிய கிராமங்களுக்கு சுமார் 200 வருடங்களுக்குப் பின் மின்சாரவசதி கிடைக்கவுள்ளது.

இருண்டகண்டம் என அழைக்கப்படும் மேற்படி கிராமங்களில் மின் வழங்க அமைச்சர் நடவடிக்கை எடுத்த போதும் படையினர் அனுமதி வழங்க மறுத்துவந்தனர்.

பிரதியமைச்சரின் தபால் தொடர்புகளை காத்தான்குடி அலுவலகத்தில் நடைபெற்ற பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடனான சந்திப்பு ஒன்றிலேயே மின்சாரம் வழங்குவது குறித்து அனுமதி வழங்கப்பட்டது. (க-60)

## 24ஆம்திகதி திருவள்ளுவர் விழா

(யாழ்ப்பாணம்)

திருவள்ளுவரின் நினைவு நாளைஒட்டி நாளை 24ம் திகதி யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் திருவள்ளுவர்விழா இடம்பெற உள்ளது.

மு.ப9மணியளவில் இடம்பெறஉள்ள இவ்விழாவில் நடைபெற்று முடிந்தபாடசாலை மட்டங்களுக்கிடையிலான திருக்குறள்போட்டிக்கான பரிசுகளும் வழங்கப்படுமென போட்டி ஒருங்கிணைப்பாளர் எம்.பி.அருளானந்தன் தெரிவித்துள்ளார்.

இவர்மேலும் கூறுகையில்' இவ்ஆண்டுக்குள் 1330குறள்களையும் மனனம்செய்து ஒப்படைக்கும் மாணவர்க்கு விசேடவிருதுகளும் வழங்கப்படவுள்ளது என்றார். (க-2)

## பருத்தித்துறை வீதி அபிவிருத்திக்கென 10 மில்லியன் ரூபாஒதுக்கீடுசெய்யப்பட்டது

(பருத்தித்துறை)

2000 ஆம் ஆண்டிற்கான வீதிகள் புனரமைப்புத் திட்டங்களிற்கென வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் பருத்தித்துறை வீதி அபிவிருத்திக்கென10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு வேலைகளின் எஞ்சிய பகுதிகளைப் புனரமைக்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை வீதி அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் இடம்பெறும் இவ்வருட வேலைத்திட்ட பணிகளுள் புலோலி வல்லிபுரம் வீதி, பொலிகண்டி சான்டார் சந்தை வீதி, வரணி இயற்றாலை வீதி, சாவகச்சேரி டச்சு வீதி, சாவகச்சேரி பழைய வீதி, போன்றன புனரமைக்கப்படவுள்ளன.

1999 ஆம் ஆண்டு புனரமைப்பு மேற்கொள்ளப்பட்டு இவ்வருடமும் மேற் கொள்ளப்படும் பணிகள் நெல்லியடி கரணவாய் வீதி, மருதங்கேணி ஆழியவளை வீதி, உடுப்பிட்டி மாலுசந்தி வீதி, இயற்றாலை வரணி வீதி, போன்ற இடங்களில் இடம் பெறுகின்றது

மேற்படி இடங்களில் வீதிகள் புனரமைக்கப்படுவது மட்டுமன்றி பாலங்களும் புதிதாக திருத்தி அமைக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (க-11)

## நெடுந்தீவு வைத்தியசாலையில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

நெடுந்தீவு மாவட்டவைத்தியசாலையில் மருந்துக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக விசனம் தெரிவிக்கப்படுன்றது.

கடந்த சில தினங்களாக அத்தியாவசியமாக தேவைப்படுகின்ற பனடோலுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வெளியிடத் தொடர்புகள் அற்ற நிலையில், நாளாந்தம் தேவைப்படும் மருந்துகள் கூட கையிருப்பில் இல்லாததனால் சிகிச்சைக்காக வரும் 75இற்கு மேற்பட்ட வெளி நோயாளருக்கு, மருந்துகள் வழங்க முடியாத நிலையில் வைத்தியசாலை வட்டாரம் திண்டாடுகின்றது .என கவலை தெரிவிக்கப்படுகின்றது. (க-82)

## யாழ். மகளிர் அபிவிருத்தி நிறுவன அங்கத்தவர்களுக்கு பயிற்சி வழங்க முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் செயற்படும் மகளிர் ஆய்வு அபிவிருத்தி நிறுவனம தமது120 அங்கத்துவ பெண்களுக்கு முதலுதவி ற்றிய விசேட ஏழு நாள் பயிற்சியைவழங்கமுன்வந்துள்ளது.

இப் பயிற்சிகள் இன்று 23ம்திகதியில் இருந்து 27ம் திகதிவரை60பேர் கொண்ட ஓர் அலகிற்கும், அடுத்தமாதம் 1ம்திகதியில் இருந்து 5ம் திகதிவரை மீதி 60பேர் மற்றய அலகிற்குமான பயிற்சிகள்இடம்பெறும்.

மேற்படி கருத்தரங்குகள் திருநெல்வேலி பயிற்சிநிலையத்தில் இடம்பெறலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இப் பயிற்சிக்கான சான்றிதழ்கள் 8ம்திகதியாழ். இந்துக்கல்லூரியில் இடம்பெற இருக்கும் மகளிர்தின விழாவில் வழங்கப்படும் எனயாழ். மகளீர் ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தின் இணைசெயலாளர் செல்வி பானுமதி தெரிவித்துள்ளார். (க-2)

## மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற தொண்டர் ஆசிரியர் போராட்டம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 10வருடங்களாக நிரந்தரநியமனம் பெறாது பணியாற்றி வரும் தொண்டர் ஆசிரியர்கள் இணைந்து நேற்றுக் காலை 7 00 மணி முதல் மட்டக்களப்பு 'கல்வித் திணைக்களம் முன்பாக மறியல்போராட்டம்நடாத்தியுள்ளனர்.

மட்டக்களப்பு பட்டிருப்பு, கல்குடா ஆகிய' கல்வி வலயங்களில் சுமார்1296 தொண்டர் ஆசிரியர்கள் 10வருடங்களாக நிரந்தர நியமனம் இன்றி பணியாற்றி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த ஜனவரி 10ம்திகதி மட்டக்களப்பு மகாத்மாகாந்தி சதுக்கத்தில் கூடி இவர்கள் மறியல். போராட்டம் ஒன்றை நடத்தியமையும் தெரிந்ததே. (க)

## ஆங்கிலப் பயிற்சி நெறி ஆரம்பம்

(சாவகச்சேரி)

படித்துவிட்டு வேலையற்றிருக்கும் இளைஞர் யுவதிகளுக்கான ஆங்கிலப் பயிற்சி நெறி ஒன்றினை தென்மராட்சி இந்து இளைஞர் சேவை மன்றம் ஆரம்பித்துள்ளது.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் கடந்த 14ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இப் பயிற்சி நெறியில் 40இற்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் பங்கு கொள்வதாக தென்மராட்சிஇந்துஇளைஞர்மன்ற அதிகாரி செ.நாகேந்திரன் தெரிவித்துள்ளார். (க-21)

## சாவகச்சேரி நகரில் சீரற்ற மின் விநியோகம்;பாவனையாளர் அதிருப்தி

(தென்மராட்சி)

இலங்கை மின்சார சபையினால் சாவகச்சேரி நகரப் பகுதியில் முன்பு ஒன்று விட்ட ஒரு நாளுக்கு விநியோகம் செய்யப்பட்ட மின்சாரம் இப்போது ஒரு கிழமைக்கு ஒரு நாள் என்ற ரீதியில் விநியோகம் செய்யப் படுகின்றது.

இது குறித்து சாவகச்சேரி நகரப் பகுதியைச் சேர்ந்த மின்சார பாவனையாளர்கள் மிகவும் அதிருப்தியடைந்துள்ளனர்.

அதே சமயம், சாவகச்சேரி நகரில் கச்சாய் வீதி மின்சார பாவனையாளர்களுக்குத் தினசரி மின்சாரம் விநியோகம் செய்யப்படுவதாகவும் தெரிய வருகின்றது. (க-77)

## ஷெல்வீச்சிற்கு இலக்காகியவர் மரணம்

(அச்சுவேலி)

தனங்களப்பில் ஷெல்வீச்சிற்கு இலக்காகிகாயமடைந்தவர் யாழ்.வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றபோதிலும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் அச்சுவேலிக்கு மருத்துவமனையில்இருந்து கொண்டுவரப்பட்டு ஞாயிறு அன்று இரவு 9.30 மணியளவில் மரணமடைந்தார். கந்தையா யோகலிங்கம் (வயது 55) என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார். (க-57)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய 51 வது வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நடப்பு வருடத்திற்கான செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (க-5)

படையினரால் கைது செய்யப்பட்ட

# தமிழ் இளைஞர்களின் விபரங்களை பெறுவதற்கு ஆவன செய்யவும்

## யாழ். எம். பி. ஜெகனிடம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கையின்போது கைதுசெய்யப்பட்டு மற்றும் காணாமல் போனோர் தொடர்பான உறுதியான தகவல்களை பாதுகாப்பு அமைச்சினூடாக பெற்றுத்தரும்படி தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கண்டவாறு யாழ்ப்பாணத்தில் செயற்படும் மனித கௌரவத்திற்கான அமைப்பின் இணைப்பாளர் ஐ. சிவராசா ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வி.கே. ஜெகனுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் அக்கடிதத்தில்மேலும் தெரிவித்துள்ளதாவது;

இராணுவ நடவடிக்கையின் காரணமாக 96, 97 காலப்பகுதியில் வடபகுதியில் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு அவர்களைப்பற்றிய எவ்வித தகவலும் பெறமுடியாது உள்ளோர் விடயமாக தங்களின் முதலாவது பாராளுமன்ற உரையில் எடுத்துக் கூறியிருந்தமைக்காக எங்களின் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த நான்கு வருடங்களாக கைதாகி காணாமற் போனோரின் பெற்றோர்கள், உறவினர்கள் படும் வேதனைகளையும், மற்றும் வறுமை, நோய் போன்றவற்றால் வாடும் குடும்பங்களின் நிலைகளையும் தாங்கள் நேரிலும், கேட்டும் அறிந்துள்ளீர்கள்.

பலரின் மத்தியில் பகிரங்கமாக இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்ட இளைஞர்யுவதிகளை நேரில் கண்டசாட்சிகளும் கைதுசெய்த படையினரின் விபரங்களும் அரசால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுக்களினால் கோரப்பட்டபோதிலும் பின்னர் காணாமற்போனோர் பற்றிய தகவல்களின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட பெயருடையவரை தேடித்தரமுடியாது என விசாரணைக்குழு முடிவு செய்தது கவலைக்குரிய விடயமாகும்.

காணாமல்போனோர் பற்றி அறிவது கேள்விக்குரிய விடயமாகியுள்ள இந்தநிலையில் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களில் பலர் இன்று மனநிலை பாதிக்கப்பட்டவர்களாக எம் சமூகத்தில் காணப்படுகின்றனர்.

இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

# தனியார் மருத்துவமனை சம்பந்தமான சட்டமூலம் விரைவில் பாராளுமன்றில்

(கொழும்பு)

தனியார் மருத்துவ மனைகள சம்பந்தப்பட்ட புதிய சட்ட மூலம் ஒன்று விரைவில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக அமைச்சர் ஸ்ரீபாலடீசில்வா தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;

உத்தேச சட்ட மூலத்தின்படி சகல தனியார் மருத்துவ மனைகளும் மருத்துவ நிலையங்களும் அவற்றின் தரங்களுக்கேற்ப தரம்பிரிக்கப்படும்.

பயிற்சியற்ற தொழிலாளர்களை வேலைக்குச் சேர்த்துக் கொள்வதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.

குறிப்பிட்ட தரமில்லாத பட்சத்தில் வைத்தியசாலைக்கு வழங்கப்படும்அனுமதி நீக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

(க-9)

வடமராட்சிக் கிழக்கிலிருந்து

# இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை

வடமராட்சி கிழக்கு பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவில் வசிக்கும் உடுத்துறை வத்திராயன் மருதங்கேணி பகுதிகளைச் சேர்ந்த 42 குடும்பங்களிற்கு இது வரை எந்த வித நிவாரணமும் வழங்கப் படவில்லை என புகார் தெரிவிக்கப்படுகிறது.

இடம் பெயர்ந்த மக்கள் தமது உடுபுடவைகளைக் கூட கைவிட்ட நிலையில் இடம் பெயர்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(க-43,52)

# "லயன் எயார்" விமான விபத்தில் கொல்லப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு இல்லை

## -பாதிக்கப்பட்டோர் விசனம்-

(கொழும்பு)

1998 ஆம் ஆண்டு இடம் பெற்ற லயன் எயார் விமான விபத்தில் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படாமைகுறித்து பாதிக்கப்பட்டவர்கள் விசனம் தெரிவிக்கிறார்கள்.

கொழும்பு நகரசபை ஜா-எல குண்டுவெடிப்பினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவரும் அதே வேளை விபத்துக்குள்ளான லயன் எயார் விமானத்தில் கொல்லப்பட்ட 48பேர்களின் குடும்பங்களுக்கு விபத்து நடைபெற்று இரண்டு வருடமாகியும் பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தவிதமான நிவாரணமும் வழங்கப்படாமல் இருப்பது பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

(வ)

பம்பாய் விதைவெங்காயம் இன்றி

# யாழ். மாவட்ட விவசாயிகளின் வெங்காய உற்பத்தி பாதிப்பு

(தென்மராட்சி)

யாழ். மாவட்டத்திலுள்ள பம்பாய் வெங்காய உற்பத்தியாளர்கள் பம்பாய் வெங்காயத்தை உற்பத்தி செய்வதில் நாட்டம் கொண்டுள்ளபோதிலும் விதை வெங்காயம் இல்லாத நிலை பம்பாய் வெங்காய உற்பத்தியை ஆரம்பிக்க முடியாத நிலையில் விவசாயிகள் இருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்து விவசாயிகளால் விரும்பி வரவேற்கப்படும் ''றம்போறெட்'' இன வெங்காயத்தை குறிப்பிட்ட காலத்தில் யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவர முடியாத நிலை கமநலசேவைகள் திணைக்களகத்துக்கு ஏற்பட்டுள்ளதாகவும் அறிபப்படுகின்றது.

அதேவேளை கடந்த வருடம் குறித்த திணைக்களம் பம்பாய் வெங்காய விதைகளைக் கொழும்பில் இருந்து கொண்டு வந்திருந்த போதிலும் மாற்றம் காரணமாக அவை உற்பத்தி முயற்சியில் பயன்படுத்தப்படாமல் போனதாகவும் அதன் பொருட்டு கமநல கேந்திர சேவைகள் நிலையங்களுக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

இது இவ்வாறிருக்க, பம்பாய் வெங்காய விதை தேவைப்படும் விவசாயிகள் தமக்குத் தேவைப்படக்கூடிய விதைகளுக்கு முற்பணம் வழங்கும் பட்சத்தில் அவற்றினை விமானம் மூலம் கொண்டுவந்து விநியோகிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-77)

ஜம்மு-காஷ்மீரில்

# தீவிரவாத நடவடிக்கையை ஒடுக்க 2புதிய படையணிகளை அனுப்பத்திட்டம்

(புதுடில்லி)

ஜம்முகாஷ்மீர் பகுதியில் சட்ட ஒழுங்கு சீர்குலைவு மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் அப்பகுதிக்கு புதிய படையணிகளை அனுப்ப அரசு திட்டமிட்டுள்ளதாக தெரியவருகிறது.

அண்மையில் ஜம்முகாஸ்மீர் பகுதியில் நடந்த மாநில அரசு இராணுவ, துணை இராணுவ அதிகாரிகளுடன் நடாத்திய பாதுகாப்பு சம்பந்தமான கூட்டத்திலேயே மேற்படி முடிவை மத்திய அரசு அறிவித்துள்ளது.

ஏற்கனவே 2 பொலிஸ் படையணிகள் அங்கு அனுப்பப்பட்டு பணியில் ஈடுபட்டிருப்பினும், தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கையை மேலும் விரிவுபடுத்து முகமாவே சி. ஆர். பி. எப் பொலிஸ் படை பபணிகளை அனுப்ப திட்டமிட்டிருப்பதாக தெரியவருகிறது.

(க-9)

# நாஸிஸ வாதிக்கு எதிராக ஒஸ்ரியாவில் பெரும் ஆர்ப்பாட்டம்

(வியன்னா)

ஒஸ்ரியாவின் கூட்டு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் நாஸிஸ வாதியான ரெய்லருக்கு எதிராக 1 இலட்சத்து 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஒஸ்ரியா தலைநகர் வியன்னாவில் கூடிய பெருந்தொகையான மக்கள் ரெய்லருக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய சுலோகங்களை ஏந்தியவண்ணம் கோஷங்களை எழுப்பியதாகவும் கூறப்படுகிறது.

இதுபோன்றதோர் ஆர்ப்பாட்டம் ஒஸ்ரியாவில் இற்றைவரை கால அரசியலில் ஒருபோதுமே இடம் பெற்றதில்லை என ஆர்ப்பாட்டத்தை நேரில் கண்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை 30 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள், அண்மையில் வியன்னாவில் ஒன்றுகூடி ரெய்லருக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை தெரிந்ததே.

(க-9)

வட அமெரிக்காவில்

# சூறாவளி அனர்த்தம் ஏற்படுமென ஆய்வாளர் கடும் எச்சரிக்கை

(வோஷிங்டன்)

வடஅமெரிக்கா மற்றும் கரீபியன் தீவுகளில் மிகப் பெரும்சூறாவளி ஏற்படப் போவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக கால நிலை ஆய்வாளர்கள் அச்சம்தெரிவித்துள்ளனர்.

இப்பகுதிகளில் தற்போது உருவாகி வரும்புதிய கால நிலை மாற்றங்கள் மிகவும் மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்தும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

1940,1950 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் வடஅமெரிக்கா,மற்றும் மேற்கிந்தியத் தீவுகளில் ,சூறாவளிக்காற்று ஏற்படுத்தியதைப் போன்ற அனர்த்தங்கள் இம்முறையும் ஏற்படலாம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து மேற்படி பகுதிகளில் வாழும் மக்கள்பெரும் பீதியுடன் காணப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

(க-9)

வட நைஜீரியாவில்

# கிறிஸ்தவ - முஸ்லிம்கள் மோதல் பலர் பலி! கடைகள் தீவைப்பு

(லாகோஸ்)

வட நைஜீரிய நகரான கடுனாவில் கிறிஸ்தவ மக்களுக்கும் முஸ்லிம்மக்களுக்கும் இடையே ஏற்பட்ட வன்முறைகளில் பலர் கொல்லப்பட்டுள்ளதுடன்' கடைகள் பல தீவைத்துகொளுத்தப்பட்டதாகத் தெரிய வருகிறது.

சிரியா எனப்படும் இஸ்லாமியர் ஆதரவு சட்டம் ஒன்றை அந்நாட்டு அரசு அறிமுகப்படுத்தஇருந்ததைத் தொடர்ந்தே அங்கு பெரும்பான்மையினராக வாழும் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே வன்முறைகள்வெடித்ததாகத்தெரியவருகிறது.இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது.

இஸ்லாமியர்நலன் பேணும் மேற்படி சட்டம் அறிமுகப்படுத்தப்படுவதை எதிர்த்து நகரின் மையப் பகுதியில் ஆயிரக் கணக்கான கிறிஸ்தவர்கள் கூடியிருந்தனர்.

அவ்வேளையில்இஸ்லாமியர் அங்கே புகுந்து குழப்பம் ஏற்படுத்த விளைந்த வேளையிலேயே வன்முறைகள் வெடித்தன,

இதனால் கட்டடங்கள் பல எரிந்த நிலையில் காணப்படுவதாகவும் நகரமே ஸ்தம்பித நிலையை அடைந்திருப்பதாகவும் நிலைமையை நேரில் அவதானித்த மனித உரிமை வழக்கறிஞர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

(க-9)

# ஹிஸ்புல்லா தீவிர வாதிகளுக்கு ஆதரவு வழங்க எகிப்து ஆட்சியாளர் முடிவு

(பெயரூட்)

இஸ்ரேலுக்கு எதிர கப் போரிடும் ஹிஸ்புல்லா தீவிரவாதிகளுக்கு ஆதரவு வழங்கப் போவதாக எகிப்து மற்றும் லெபனான் ஆட்சியாளர்கள் கூட்டறிக்கை மூலம் தெரிவித்துள்ளனர்

லெபனான் அதிபர் எமில் லாட், எகிப்து அதிபர் முபாரக் ஆகியோர் இணைந்து பெய்ரூட்டில் இருந்து வெளிட்ட அறிக்கை ஒன்றிலேயே மேற்ப்டி தீர்மானம் அறிவிக்கப்பட்டிருக்கிறது

தமது நிலம் சுதந்திரம் பெறும்வரை போரிட்டு தமது உரிமைகளை பெற ஹிஸ்புல்லாக்கு முழு உரிமையும் உண்டு. அதற்கு தாராளமாகவே ஆதரவு வழங்குவோம் எனவும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு இடைவெளியில் எகிப்து அதிபர் ஒருவர் லெபனான் செல்வது இதுவே முதல் தடவை எனக்கூறப்படுகிறது.

(க-9)

யாழ்ப்பாணம்

முறை கோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒவ்வாது வானம் பெயல்.
- குறள்

# வலம்புரி

## மக்கள் தொண்டு மகத்தானது

என்னில் இனியன் எனக்கினியாருளன் என்ற வினாவும் நன்றும் தீதும் பிறர் தர வாரா என்ற சொற்றொடரும் எம்மை நாமே ஆளாக்கிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணக்கருவை ஏற்படுத்துகிறது. எங்கள் நாட்டுப் பிரஜைகள் வீட்டுப் பற்றை மறந்து ஒரு தசாப்தம் மறைந்துவிட்டதெனலாம். கதிரைகளைச் சூடாக்கி, மக்கள் தொண்டுக்குரியவர்கள் என முத்திரைகுத்திக் கொள்பவர்கள் உண்மையில் மக்கள் தொண்டர்களாக இருப்பது அவசியம்.

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்வோம் என தும்மைப் பெருப்பிக்க முனைவதும் பெருச்சாளிகளை புடை சூழ வைத்திருப்பதும் பொருத்தமற்ற தொன்று உள்ளூராட்சி வரிசையில் கிராமசபை, நகரசபை, பட்டினசபை, மாநகர சபை, என்பன மக்களுக்கு நல்லன செய்யத் தலைப்படுவன.

யுத்த நிலை காரணமாக ஏற்பட்ட இடம் பெயர்வு அகதிவாழ்க்கையைக் கருத்திற் கொண்டு சிவாஜிலிங்கம் எடுத்த முடிவு சிந்தனைத் தெளிவைக் காட்டுகிறது. இந்த உணர்வும் தெளிவும் தமிழ்ப்பிரதேசத்தில் உள்ள அனைத்துச் சபைகளுக்கும் பரவுவது ஆரோக்கியமானதே.

யாழ்ப்பாணப் பட்டினத்தை Queen City என்றும் Well icept and a Clean City என்றும் பெருமை பேசிக்கொண்டனர் 1914 இல் இன்றைக்கு எண்பத்தாறு வருடங்களுக்குப் பிறகு குன்றும் குழியுமாய்எலும் புடைக்கும் தெருக்களைத் தன தாக்கிக் கொண்டது யாழ்ப்பாணம். இராணிப் பட்டினத்தை மீண்டும் எழில் பெற வைக்கின்ற திராணி நிர்வாகிகட்கு வேண்டும். மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று உதடுகள் மட்டும் உச்சரித்தால் போதாது. உள்ளமும் உருப்படியாக உச்சரிக்க வேண்டும்.

நாமிருக்கும் பிரதேசம் எம் மக்கள் என்ற நல்லுணர்வு பிறக்க வேண்டும் சேவையைச் சிரமேற் கொண்டு நாளும் செயற்படவேண்டும். மக்களின் பன்முகத்துமரங்கள் அவர்களை வாட்டாது போக்கும் வழிமுறைகள் அனைத்தும் செய்தாக வேண்டும்.

- அன்புடன் ஆசிரியர்

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்கள்

## வினா இல. 6

★ இப்பாடலை கவனமாக வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

தைத்திருநாள் இல்லமெல்லாம் தளிர்த்திடும் தைப்பொங்கல்
இத்தனைநாள் காத்திருந்தோம் இனிய தமிழ்ப்பொங்கல்
கோலமிட்டு விளக்கேற்றி கும்பிடுவார் அம்மா பாலெடுத்துப்
பொங்கலுக்குப் பானைவைப்பார் அப்பா

(1) இப்பாடல் என்ன பண்டிகையைப் பற்றி விபரிக்கிறது?
(2) இப்பண்டிகை கொண்டாடப்படும்மாதத்தின் ஆங்கிலப் பெயரை எழுதுக?
(3) இதன்போது அம்மா எனன செய்வார்?
(4) இதன்போது அப்பா என்ன செய்வார்?

**ஒத்தசொல் எழுதுக.**
(5) இல்லம் (6) நாள் (7) கோலம்.

**பிரித்தெழுதுக.**
(8) விளக்கேற்றி (9) பாலெடுத்து (10) கோலமிட்டு

★ இலக்கம் 11 - 15 வரையான வினாக்களில் தரப்பட்ட மூன்று சொற்களில் ஒன்று மட்டுமே சரியானது. சரியான சொல்லைத் தெரிவு செய்து அதனை எதிரே உள்ள இடை வெளியில் எழுதுக.

(11) பாடசாழை, படசாலை, பாடசாலை
(12) வெண்ணிறப்பால், வெண்ணிறப்பாழ், வென்னிறப்பால்
(13) மலைகாலம், மழைகாலம், மலைகலம்
(14) பல்கழைக்கழகம், பல்கலைக்கழகம். பள்கலைக்கழகம்
(15) கணனி, கனனி, கணணி

★ கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு சொல்லில் விடை எழுதுக.

(16) நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட நிலப்பரப்பு.....................ஆகும்.
(17) ..............மண், நீர் உள்ளடக்கம் மிகவும் குறைவானது.
(18) அரசாங்க ஊழியர்களுக்கு சேவையில் இருந்து விலகிய பின் முதுமையில் வழங்கப்படும் பணம்.......................என அழைக்கப்படும்.
(19) காகம், கரைவது போல கோழி..............................
(20) பாம்பின் இளையது குட்டிபோல பசுவின் இளையது .................... ஆகும்.

★ விலங்குகளை வளர்ப்பதன் மூலம் மனிதன் பல்வேறு நன்மைகளைப் பெறுகின்றான். கீழே சில விலங்குகள் தரப்பட்டுள்ளன. இவற்றினால் மனிதன் பெறும் நன்மைகள் ஒவ்வொன்று எழுதுக.

(21) பூனை
(22) கழுதை
(23) தேனீ

★ கீழ்வரும் கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக.

(24) குப்பைமேனி கிளைவிட்டு வளரும் ஒரு பூண்டுத் தாவரம் ஆகும். ( )
(25) தாவரங்கள் வளர்ச்சியடையும், சுவாசிக்கும், இடம் பெயரும். ( )

இல. 25 - 30 வரையான வினாக்களில் தரப்பட்ட தமிழ்ச் சொற்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான ஆங்கிலச் சொல்லின் கீழ் கோடிடுக.

(26) பாடசாலை
(1) SCHOL (2) SCOOL (3) SCHOOL
(27) குளிர்களி
(1) ICE CREAM (2) ICE CREEM (3) CREAM
(28) ஏழு
(1) SAVEN (2) SEVEN (3) SAVAN
(29) எங்கே
(1) WHEER (2) WHERA (3) WHERE
(30) சீப்பு
(1) COMP (2) COMB (3) CAMP

ஆக்கம் - சுந்தர்

### கல்விப்பகுதி வினா இல. 06

"வலம்புரி"
இல. 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ..........................................
சொந்த முகவரி: ..........................................
கற்கும் பாடசாலை: ..........................................
மாணவர் கையொப்பம்: ..........................................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளை தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

# புலமைப் பரீட்சை வினா இல.5 விடைகள்

| | | | |
|---|---|---|---|
| (01) | 2 | (02) | 1 |
| (03) | 3 | (04) | 3 |
| (05) | 3 | (06) | எழில்மிகு |
| (07) | மனவுறுதியுடன் | (08) | நீங்கள் |
| (09) | அர்ப்பணித்துள்ளோம் | (10) | சின்னமாக |
| (11) | ஜெனோசியா | (12) | பெனடிற்றா |
| (13) | பெனடிற்றா | (14) | ஜெனோசியா |
| (15) | நெல் விதைப்பதற்கு | (16) | எட்டி எட்ட |
| (17) | தங்க | (18) | காத்திருப்போம், வீசிடுவோம் |

(19) 1. கழனி 2. நண்பர்கள் 3. நிரல்/நிரை
(20) 1. Friends 2. BOX 3. Rain

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சை வினா இல. 5

அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம்

(01) த. தக்சனா, யா / கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.
(02) ஆ. சஞ்ஜியா, யா/நாகர்கோவில் மகாவித்தியாலயம்.
(03) தெ துவாரகன், யா / எழுதுமட்டுவாழ் கணேச வித்தியாலயம்.
(04) கி. துவாரகா, யா / இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.
(05) வை. கிருபாகரன், யா / எழுதுமட்டுவாழ் கணேச வித்தியாலயம்.
(06) சி. சிவறஞ்சினி, யா / தாவடி. இ. ந. க, பாடசாலை.
(07) த. கஸ்தூரி, யா / சுண்டுக்குளி மகளிர் கல்லூரி,
(08) வே. நித்யா, யா / திக்கம் சித்தி விநாயகர் பாடசாலை.
(09) சி. கோபிநாத், யா / சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்,
(10) சி. கிருபாலினி, யா / அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்.
(11) ப. லக்ஷிகா, யா / இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.
(12) ம. சௌதினி, யா / நவாலி அட்டகிரி சைவ வித்தியாலயம்.
(13) த. திருக்குமரன், யா / இந்து ஆரம்ப பாடசாலை.
(14) வி. வகீஷன், யா / இந்து ஆரம்ப பாடசாலை.
(15) பா, நிருஜா, யா / சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.
(16) ப. கலோசனா, யா / சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
(17) ச. நூர்ஜிதா, கிளி / பளை மத்திய கல்லூரி.
(18) க. ராகசொரூபி, யா / சென்யோன் பொஸ்கோ.
(19) சி. சம்பூரணி, வட்டு / யாழ்ப்பாணக் கல்லூரி.
(20) து. திவாகரசர்மா, யா / நவாலி அட்டகிரி சைவ வித்தியாலயம்.
(21) இ. கரன், யா / சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை.
(22) நி. குயிந்தன், நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை
(23) கு. பகிரதன் யா / திருநெல்வேலி இ. த. க. பாடசாலை.
(24) த. விதுர்ஷா, யா / சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம்.
(25) ப. செந்துளா, யா / எழுதுமட்டுவாழ் கணேச வித்தியாலயம்.
(26) மு. கஜனி, யா / சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
(27) ச. சிந்துஜா, யா / கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
(28) கு. மதீசன், யா / கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
(29) செ. லோஜினி, யா / மகாஜனக் கல்லூரி.
(30) பா. மயூரிகா, யா / றோ. க. த. க பாடசாலை.
(31) ஆ. கலைச்செல்வி, யா / மாதகல் சென்யோசப் மகா வித்தியாலயம்.
(32) செ. நிமால்பிரசாத், யா / றோ.க.த. பாடசாலை
(33) இ. மிதிலா, யா / ஜென்யோன் பொஸ்கோ.
(34) இ. தரங்கினி, யா / இந்து ஆரம்பப் பாடசாலை.
(35) பா. அசோக், யா / கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை.
(36) ச. ஷாமளை, யா / இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
(37) செ. பார்கவி, யா / சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம்.
(38) யோ. தர்ஷிக்கா, யா / இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.
(39) தெ. பவனுஜா, யா / சோதிவேம்படி வித்தியாசாலை.
(40) அ. சசிகலா, யா / மணியகாரன் தோட்டம்.
(41) க. ராம், யா / தேவரையாளி இந்துக் கல்லூரி.
(42) றே. பபிதா யா / அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை.

# இலங்கையின் தொழில் நுட்பத்திற்கென ஜேர்மன் 6 கோடி மார்க் உதவி

(கொழும்பு)

இலங்கையின் தொழினுட்ப முயற்சித் திட்ட முதலீட்டிற்கென 6 கோடி ஜேர்மன் மார்க்கினை வழங்க ஜேர்மன் முன்வந்துள்ளது.

இதற்கான ஒப்பந்தம் இரு நாட்டு பிரதிநிதிகளுக்கிடையே நேற்று முன்தினம் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

இலத்திரனியல், இறப்பர் உற்பத்தி, இரசாயனவியல் போன்ற துறைகளிலேயே மேற்படி பணம் முதலீடு செய்யப்படும் எனத் தெரிய வருகிறது. (க-9)

### இன்றைய சிந்தனை

நட்புக்கொள்ளமுன் நன்கு ஆராய்ந்து நட்பு பூணவேண்டும் நட்டைபத் தவிர்க்கவிரும்பின்இன்னும் தீரஆலோசித்து தவிர்க்க வேண்டும்.

பிரான்ஸிஸ்

# ஆசிரியர் தரத்தில் பதவியுயர்வு
# புள்ளியிடுவது விளக்கப்பட்டுள்ளது

(திருகோணமலை)

ஆசிரியர் சேவையில் தற்போது உள்ள தரங்களில் இருந்து பதவி உயர்த்துவதற்கான இறுக்கமான நிபந்தனைகள நீக்கப்பட்டது குறித்தும், தேவையான புள்ளிகள் குறித்தும் வலம்புரி விரிவாக விளக்கியிருந்தது தெரிந்ததே,

ஆசிரியர் தரத்தில் பதவியுயர்வை மேற்கொள்வதற்கான புள்ளிகள் எவ்வாறு கணிப்பீடு செய்யப்படும் என்பதைக் கேட்டு பல ஆசிரியர்கள் வலம்புரிக்குக் கடிதம் எழுதியிருந்தார்கள் அவர்களின் நன்மைகருதி புள்ளியிடும் முறை இங்கே தரப்படுகின்றது,

★ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்று சான்றிதழ் செல்லுபடியாகும் திகதியிலிருந்து ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரு புள்ளி வழங்கப்படும்!

★ பயிற்றப்படாத காலப் பகுதியில் ஒரு வருடத்திற்கு அரைப்புள்ளி வழங்கப்படும்.

★ பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்தவரை பட்டதாரி ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்பட்ட காலத்திலிருந்து ஒவ்வொரு வருடத்திற்கும் ஒருபுள்ளி வழங்கப்படும்.

★ இதேவேளை குறித்த ஆசிரியர் பெற்ற பட்டத்திற்கு மூன்று புள்ளிகள் வழங்கப்படும் இங்கு பட்டத்தின்பிரிவுகளோ சிறப்புச் சித்திகளோ கருத்தில் சொள்ளப்படமாட்டாது.

★ பட்டமேற் கல்வி டிப்ளோமாப் பட்டம் பெற்றிருந்தால் ஒருபுள்ளி மட்டும் வழங்கப்படும். [இங்கு டிப்ளோமாப் பட்டம் பெற்ற காலம் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது]

★ முது தத்துவமாணி, முது கல்வியியல்மாணி, முது விஞ்ஞானமாணி போன்ற பட்டங்கள் பெற்றிருந்தால் அதற்கும் ஒரு புள்ளி வழங்கப்படும்.

எனினும் வகுப்பு 3, தரம் ஒன்றில் உள்ள ஆசிரியரை வகுப்பு 2, தரம் இரண்டிற்குப் பதவி உயர்த்துவதற்காக ஏற்கனவே அவர் பெற்ற பட்டத்திற்குப் புள்ளி வழங்கப் பட்டிருந்தால் அவரை வகுப்பு 2, தரம் ஒன்றிற்குப் பதவியுயர்த்துவதற்கு அவர் பெற்ற பட்டத்திற்கு மேலுமொருதடவை மூன்று புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது,

இதேவேளை ஆசிரியர் ஒருவர் பட்டம் பெற்ற ஆண்டும் கருத்தில் கொள்ளப்பட்டு புள்ளிகள் இடப்படுமா என்பது பற்றி பதவியுயர்த்துதல் தொடர்பான சுற்றுநிருபத்தில் தெளிவு படுத்தப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

### இரண்டாவது---

எனினும் நேற்று மதியம் வரை தடயப் பொருட்கள் எதனையும் உறவினர்கள் அடையாளம் காட்டவில்லை என பேராசிரியர் சந்திரசிறி நெரியல்ல எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

உறவினர்கள் இத் தடயப் பொருட்களைப் பார்வையிட்டவேளை யாழ். மேலதிக நீதவான் எம். இளஞ்செழியன், பேராசிரியர் சந்திரசிறி நெரியல்ல, அரச சட்டத்தரணி யஸந்த கொத்தாகொட மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் ஆகியோரும் பிரசன்னமாயிருந்தனர்.

முதல் நாள் வைக்கப்பட்டிருந்த பொருட்களே நேற்றும் வைக்கப்பட்டிருந்தன. [வ-7]

### வடமராட்சி...

தங்கேணி, கரவெட்டிப்பகுதி பிரதேச செயலர்கள், கடற்றொழிலாளர்கள் சங்க உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

குறிப்பிடப்பட்ட பிரச்சினைகள் விரைவில் தீர்த்து வைக்கப்படும் என கேணல் சமரவீர உறுதியளித்ததை தொடர்ந்து மாநாடு முடிவுற்றது, (க-42)

### மரபணுப்...

இதுவரை தடயப்பொருள்களைப் பார்வையிட வருகை தராதவர்களையும் இன்று யாழ். மத்திய கல்லூரிக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை நேற்று முன்தினம் யாழ். மத்திய கல்லூரியில் பார்வைக்கு வைக்கப்பட்ட தடயப்பொருள்களில் சுமதி என்பவருடையதாக இருக்கலாம் என குமாரகுலசிங்கம் சில பொருட்களை அடையாளம் காட்டியதைத் தொடர்ந்து குற்றப்புலனாய்வுப்பிரிவினர் அவரிடம் வாக்குமூலம் பெற்றமை தெரிந்ததே. (வ-7)

ஸ்ரீ செல்வா
யாழ். ஸ்ரான்லி வீதி,
காலை 10-30 மணிக்கு
சாய்குமாரின்
'பொலிஸ் அதிகாரி'
மாலை 2-30 மணிக்கு
கார்த்திக்-பிரபு நடித்த
'தைபிறந்தாச்சு'
(புதிய வெளியீடு)
நேரடி CD
(00115)

### சுரேஷ்---

சிறீதரன்(சுகு) நாகராசா, நேசராசா (நிருபன்) கந்தையா, சிவராசா (மோகன்) ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்டவழக்கு ஒன்றிலேயே இத் தடை உத்தரவு பிறப்பித்தார்.

வழக்காளிகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி இக்ரம் முகமட் மற்றும் சட்டத்தரணிகள் பைசி, முஸ்தபா, சந்திமா வீரக்கொடி ஆகியோர் ஆஜராகி இருந்தனர். (வ)

### மனித உரிமை---

முகாமில் மூன்று பெண்கள் உட்பட பத்துப்பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-7)

### யாழ். - திருமலை...

வும் அவர் தெரிவித்தார்.

இக்கப்பலில் பயணம் செய்யும் பயணி ஒருவர் 25 கிலோவுக்கு குறைவான பொருட்களையே கொண்டு செல்லலாம் என்றும் ஒரு வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் கணக்கில் சேர்க்கப்படமாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (வ-4)

### உண்ணா--

ஊடாக மல்லாவியை அடைந்தனர். இவர்களை பண்டிவிரிச்சானில் வைத்து விடுதலைப்புலிகள் அவர்களை வரவேற்றதாகவும் அதன் பின்னர் அவர்கள் புதுக்குடியிருப்புக்குச் சென்றதாகவும் தெரியவருகின்றது.

உண்ணாவிரதிகளின் உறவினர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் முதலில் சந்திப்பொன்று நடைபெற்றதாகவும் பின்னர் அவர்கள் உண்ணாவிரதமிருக்கும் படையினரைச் சந்தித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை விடுதலைப் புலிகள் உண்ணாவிரதிகளின் உறவினர்கள் கொழும்பு திரும்பும்போது நல்லெண்ண அடிப்படையில் கைதிகளில் சிலரை விடுதலை செய்யலாம் என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (வ-4)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டு பெப் வரி மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தென்மராட்சி வயல்களில்

# நெல் அறுவடை செய்ய இராணுவம் தடை
## அறுவடை செய்த கதிர்கள் வெள்ளத்தில்

[யாழ்ப்பாணம்]

நாவற்குழி, கோகிலாக் கண்டி, மறவன்புலோ, தச்சன் தோப்பு ஆகிய பகுதிகளில் நெல் அறுவடை செய்ய இராணுவம் அனுமதி மறுத்துள்ளது.

இராணுவத்தினர் அனுமதி மறுத்ததனால் நேற்றுப் பிற்பகல் பெய்த மழையினால் நேற்று முன்தினம் அறுவடை செய்த நெல்மணிகள் வெள்ளத்தில் மூழ்கியதாக விவசாயி ஒருவர் கவலை தெரிவித்தடன் இன்றும் அறுவடைக்கு அனுமதிக்கா விட்டால் விவசாயிகள் பெரும் இழப்பை எதிர் நோக்க வேண்டிவரும் என்று வலம்புரி செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இதே வேளை நெல் அறுவடை செய்வதற்கு இராணுவம் அனுமதி வழங்கிய சில பிரதேசங்களிலும் நெல் அறுவடை செய்ய இராணுவம் அனுமதி மறுத்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

## ஒத்திவைப்பு

யாழ். மத்திய கல்லூரி விஞ்ஞான மன்றத்தினரால் கல்லூரியில் இன்றும் நாளையும் நடைபெறவிருந்த இலத்திரனியல் ஒலி ஒளி நாடா பற்றியசெயல்முறை விளக்கப் பட்டறை நிகழ்வு தவிர்க்க முடியாதகாரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மன்றப்பொறுப்பாசிரியர் தெரிவித்துள்ளார்,

இதில் பங்குபற்ற அழைக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு மிகவிரைவில் பிறிதொரு தினம் ஒதுக்கப்பட்டு பின்னர் அறிவிக்கப்படும் என்றும்அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் அளித்த வாக்குறுதிகளின் படி

# தனது குறுகிய நலன்களை கைவிட்டு ரணில்ஜனாதிபதியுடன்பேசவேண்டும்

## மாவை சேனாதிராஜா வேண்டுகோள்

நடந்துமுடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு கோடிக்கும் மேலான சிங்கள, தமிழ், முஸ்லிம் வாக்காளர்கள் இனப் பிரச்சினையை சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துவைக்கப்பட வேண்டுமென்ற ஆணையை மக்கள் தெட்டத்தெளிவாக அளித்துள்ளார்கள்.

மக்கள் அளித்துள்ளதெட்டத் தெளிவான இந்த ஆணையை ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்காவும் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் மதித்து நடக்க வேண்டும்.

அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சிதிட்டமிட்டபடி அரசுடன் பேசுவதற்கு மறுப்புத்தெரிவித்தமை தொடர்பாகத் தமிழர் விடுதலைக் கூட்டணி தேசியப்பட்டியல் எம். பி. மாவை சேனாதிராஜாவிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு வலம்புரிக்குத் தெரிவித்தார்.

மாவை சேனாதிராஜா எம். பி, இது தொடர்பாக மேலும் தகவல் தருகையில் கூறியதாவது;

ஐக்கியதேசியக் கட்சித் தலைவரை தமிழ் மக்கள் முழுமையாக ஆதரித்தமையானது அவர் ஒருசமாதான முறையில் புலிகளுடன் பேச்சு நடத்திஇனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பார் என்ற எண்ணத்தில்தான்.

எனவே பெரும்பான்மையான தமிழ்மக்கள் தன்னை ஆதரித்தது எதற்காக என உணராமல் குறுகிய சுயநல அரசியல் நோக்கத்திற்காக பேச்சுக்களில்கலந்து கொள்ள மறுத்தமையானது வேதனைக்குரியதாகும்.

இனப்பிரச்சினை விடயம் தொடர்பாகவும் அரசியலமைப்புச் சீர் திருத்தம் தொடர்பாகவும் தமது நலன்களுக்கப்பால்நாட்டுமக்களின் நலனைக் கருத்திற் கொண்டு ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்காவும் ரணில் விக்கிரமசிங்கவும் ஒன்று பட்டு பேச்சு நடத்தி தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்ய முன்வர வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-4)

## 99 தபால் பொதிகள் வந்தன

பிறமாவட்டங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட 99 தபால் பொதிகள் நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதம தபாலதிபர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை யாழ்ப்பாணத்திலிருந்து சேகரிக்கப்பட்ட 45 தபால் பொதிகள் கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-14-12)

### காவல்---

சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

15நிமிடநேரம் நடந்த இத் தாக்குதலின்போது முஸ்லிம் மத்திய கல்லூரியில் 800 மாணவர் சமூகமளித்திருந்த போதிலும் ஒரு மாணவன் மட்டும் சிறுகாயத்துக்குள்ளானார். பொலிஸார் காவல் நிலையத்தை விட்டு வெளியேறி வகுப்பறைகளில் மாணவர்களுடன் பதுங்கியதாலேயே பொலிஸாருக்கு இழப்புக்கள் குறைவாக இருந்ததாகவும் இத் தாக்குதலால் மூதூர் நகரம் சிறிது நேரம் பதற்றமடைந்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து வலயக்கல்விப்பணிப்பாளரிடம் மாணவர்களின் பெற்றோர்கள் காவல் நிலையம் முற்றாக அகற்றப்பட வேண்டும் இல்லையேல் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பமாட்டோம் என்று முறையிட்டதைத் தொடர்ந்து இரு தினங்களில் நடவடிக்கை எடுப்பதாகவும் அதுவரை பாடசாலையை மூடுவதாகவும் வலயக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (4)

### அதிகாரிகள் . . .

னன்ட் விஜயசிறிவர்த்தன ஆகிய அதிகாரிகளையும் சாதாரணசிப்பாயான நிசநத அல்விஸ் என்பவரையும் பொலிஸ் கான்ஸ்டபிள்களான அப்துல் நசீத், ரீ. ஏ. சமரவிக்கிரம ஆகியவர்களையே கைது செய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கிருஷாந்தி குமாரசுவாமி கொலை வழக்கில் சம்பந்தப்பட்டு தண்டனை விதிக்கப்பட்ட படையினர் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே மேற்படி படையினரை கைது செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் செம்மணியில் மீட்கப்பட்ட 19 எலும்புக்கூடுகளில் அங்கு எடுக்கப்பட்ட தடயப்பொருட்கள் அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட ஐந்து எலும்புக்கூடுகள் தொடர்பாக உறவினர்களின் இரத்த மாதிரிகளை மரபணுப்பரிசோதனை செய்யுமாறும் நீதிமன்றம் பணிப்புரை வழங்கியது.

மேற்படி ஏழு படையினரில் ஒரு சிலர் புலிகளுடனான மோதல்களில் இறந்து விட்டதாகவும் ஏனையோர் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது,

இதேவேளை இது தொடர்பாக ஆராய ஒவ்வொரு மாதமும் அமர்வு நீதிமன்றம் யாழ்ப்பாணத்தில் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [வ-4]

## சமூகவியல் கருத்தரங்கம்

யாழ்ப்பாண பல்கலைக் கழக சமூகவியல் சமூகத்தினால் நடாத்தப்படுகின்ற மாதாந்த கருத்தரங்கானது இன்று புதன்கிழமை மாலை 3 மணிக்கு. சமூகவியல் சமூகத் தலைவர் ம. பிரதீபன் தலைமையில் நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் 'குடும்ப வாழ்வில் இணங்கிப் போதல்' ஒரு சமூக உளவியல் தருசனம். என்னும் தலைப்பில் அகவொளி நிலைய இயக்குநர் அருட்திரு எஸ். ஜே. இராஜநாயகம் கருத்துரை வழங்கவுள்ளார். (செ-1)

### சரணடைந்த---

டைந்துள்ளார்கள் என பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில்: தப்பி ஓடிய இராணுவத்தினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை வரை கடமைக்கு திரும்புபவர்களுக்கு மீண்டும் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சரணடைந்த 164 இராணுவத்தினருக்கும் ஆயுத உபகரணங்களை வழங்கி அவர்களது படைப் பிரிவுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (வ)